உ

# வல்லை
# அருள்மிகு முத்துமாரி அம்பாள்



# வல்லைநகர் மாதரசி

ஸ்ரீவாணி வெளியீட்டகத்தின்
வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்பாளுக்கான
14ஆவது வெளியீடு
2018

உ
அம்பாள் துணை

# 14ஆவது ஆண்டு சிறப்பு மலர்
# ஆசிச்செய்தி



வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் மகோற்சவ காலத்தில் 14ம் திருவிழாவான தேர்த்திருவிழா அன்று ஆண்டு தோறும் வெளியிடப்படும் ஸ்ரீ வாணி வெளியீட்டகத்தின் 14ம் ஆண்டு மலராக வெளிவரும் சிறப்புமலருக்கு ஆசியுரை வழங்குவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

மேலும் எழுத்தாளரும் தொகுப்பாளருமான திரு. சி. சிவகுமாரன் அவர்களுடைய இச்சமயப் பணியை பாராட்டுகின்றேன். ஏனென்றால் இடைவிடாது தொடர்ச்சியாக இம்மலர் வெளியீடானது எவ்வித தங்குதடையின்றி வெளிவருவது அம்பாளின் திருவருளே ஆகும்.

எனவே இந்நூலின் ஆற்றுப்படுத்தலால் இப்பணி தொடரவும் இம்மலர் வெளிவந்து என்றும் வாடா மலராக திகழவும் எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

''சர்வேஜன சுகினோபவந்து''
''இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க''

**வாழ்க வழமுடன்**
**சுபம் - மங்களம்**

''சிவாகம சித்தாந்த ஞானதேசிக பானு''
''பிரதிஷ்டாலங்கார சித்தாந்தஸாகரம்''
''பிரதிஷ்டா சிரோமணி'' ''ஸ்ரீசுபஸ்வரம்''
''குருப்பட்டாபிஷேக ஞானகுருபானு''
'தமிழ் முகில்'

**சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணிக தேசிகர் JP**

இந்துமத குருபீடாதிபதி, பிரதம குரு,
வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில், வல்வெட்டித்துறை,
ஆதீனகர்த்தா, புற்றளை சித்திவிநாயகர் தேவஸ்தானம், தென்புலோலி.

உ

சிவமயம்

# எங்கள் முத்துமாரி

உன்னடியை நாடிவந்தோம் எங்கள் முத்துமாரி - அம்மா
உன்புகழைப் பாடவந்தோம் தாயே முத்துமாரி

செய்தவினை போக்கவந்தோம் எங்கள் முத்துமாரி - அம்மா
செய்யும் பிழை பொறுத்தருள்வாய் தாயே முத்துமாரி

தாயவளைக் காணவந்தோம் எங்கள் முத்துமாரி - அம்மா
வரம் தந்து எமைக் காத்தருள்வாய் தாயே முத்துமாரி

நல்ல தமிழ்ச் சொல்லெடுத்து எங்கள் முத்துமாரி - அம்மா
நாளும் உனைப் பாடிடுவோம் தாயே முத்துமாரி

ஊரின் குலதெய்வம் நீயே அம்மா எங்கள் முத்துமாரி - அம்மா
என்றும் நீ துணையிருப்பாய் தாயே முத்துமாரி

காலபயம் இல்லையம்மா எங்கள் முத்துமாரி - அம்மா
கையெடுத்து நாம் தொழுவோம் தாயே முத்துமாரி

பெருங்கடலை நாம் கடப்போம் எங்கள் முத்துமாரி - அம்மா
பிறப்பெடுத்த பயன் பெறுவோம் தாயே முத்துமாரி

கண்களில் நீர் பெருகுதம்மா எங்கள் முத்துமாரி - அம்மா
கருணை உள்ளம் கொண்டவளே தாயே முத்துமாரி

கண்கண்ட தெய்வம் அம்மா எங்கள் முத்துமாரி - அம்மா
காத்திடுவாய் எந்நாளும் தாயே முத்துமாரி

சரணம் சரணம் அம்மா எங்கள் முத்துமாரி - அம்மா
உந்தன் பாதமலர் சரணம் அம்மா தாயே முத்துமாரி.

சுபம்

மங்களம்.

**திருமதி வசந்தாதேவி குமரகுரு**
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

# தலைசாய்த்தோம் திருவடியில்
# வல்வை முத்துமாரியம்மா

கோவில் வாசல் தேடிவந்தேன் மாரியம்மா....! உன்
குழந்தைகளைக் காத்திடம்மா மாரியம்மா... வல்வை முத்துமாரியம்மா
நாடி உன்னைத் தேடிவந்தேன் மாரியம்மா...
தாயே நல்ல துணையாயிருப்பாய் மாரியம்மா...

நடலை சுடலையிலே மாரியம்மா...
நடுச்சுடலை காவுகொண்டாய் மாரியம்மா... வல்வை முத்துமாரியம்மா
சிவனுடனே நடனமிடும் மாரியம்மா...
எந்தன் சிங்காரி வாருமம்மா மாரியம்மா...
அரனுடனே நடனமிடும் மாரியம்மா...
எந்தன் அலங்காரி வாருமம்மா மாரியம்மா...

ஆயிரம் கண்ணுடைய மாரியம்மா...
எங்கள் அடியவரைக் காத்திடுவாய் மாரியம்மா...
பதினாராயிரம் கண்ணுடைய மாரியம்மா...
எந்தன் பரந்தாமன் தங்கையரே மாரியம்மா...
பட்டதுயர் போதுமம்மா மாரியம்மா...
தாயே பத்தினியே காத்திடம்மா மாரியம்மா...

கோடியாக் கரையை விட்டோ மாரியம்மா...
நீ குதித்து வந்த தெய்வம்மா மாரியம்மா...
சித்திரையாப் பறுவத்திலே மாரியம்மா...
நீ தீர்த்தமாடி வாராயம்மா மாரியம்மா...
கெங்கையிலே தலைமுழுகி மாரியம்மா... வல்வை முத்துமாரியம்மா
பொய்கையிலே தலைகழுவி மாரியம்மா - எந்தன்
பொற்கொடியாய் வாறாளம்மா மாரியம்மா...

ஆயிரம் கண் போதாதம்மா மாரியம்மா...
உன் கொழுமுகத்தைக் காண்பதற்கே மாரியம்மா...
சரணம் சரணமம்மா மாரியம்மா...
நாங்கள் சாய்த்தோம் திருவடியில் மாரியம்மா...

**சிவலிங்கம்,**
பொலிகண்டி.

# தேரோடும் வீதியெல்லாம்

கும்பத்தழகியம்மா கோபாலன் தங்கையம்மா
ஏழுபேர் மாரியம்மா தாயாளே! - அம்மா
ஏகபராசக்தி வாறா மாரியரே...! போடு தந்தனத்தானா
தந்தனதானா தந்தனதானா தந்தனதானா தானானே!
தந்தனதானா தந்தனதானா தந்தனதானா தானானே!

ஆயிரம் கண்ணுடைய அலங்காரி வாவனம்மா தாயாளே!
பதினாயிரம் கண்ணுடைய எங்கள் பராசக்தி வாவனம்மா தாயாளே!
தந்தனதானா தந்தனதானா தந்தனதானா தானானே!
தந்தனதானா தந்தனதானா தந்தனதானா தானானே!

பெண்ணரசிக்காகவெல்லோ பெற்றவனைக் கழுகிலிட்டாய்
மாதரசிக்காகவெல்லோ நீ மைந்தனைக் கழுகிலிட்டாய் தாயாளே!
தந்தனதானா தந்தனதானா தந்தனதானா தானானே!
தந்தனதானா தந்தனதானா தந்தனதானா தானானே!

பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமன் தங்கையம்மா
சேற்படலில் பள்ளி கொள்ளும் சிவராமன் தங்கையம்மா தாயாளே!
தந்தனதானா தந்தனதானா தந்தனதானா தானானே!
தந்தனதானா தந்தனதானா தந்தனதானா தானானே!

தேரோடும் வீதியெல்லாம் திருநடனம் ஆடிவாறாய்
நாடிவந்த பக்தருக்கு தாயாளே! - அம்மா
நல்ல துணையாயிரம்மா தாயாளே!
தந்தனதானா தந்தனதானா தந்தனதானா தானானே!
தந்தனதானா தந்தனதானா தந்தனதானா தானானே!

காய்ச்சலுடன் தடிமன் கடுநோய்கள் வாராமல்
கட்டழகி காத்திடம்மா மாரியரே!
எங்கள் கட்டழகி காத்திடம்மா மாரியரே!
வேப்பிலையால் நீதடவ வினைகளெல்லாம் ஓடிடுமே
பத்திரியால் நீதடவ தாயாரே!

எங்கள் பாவமெல்லாம் பறந்திடுமாம் தாயாரே!
தந்தனதானா தந்தனதானா தந்தனதானா தானானே!
தந்தனதானா தந்தனதானா தந்தனதானா தானானே!

ஐந்துதலை நாகமம்மா கொஞ்சி விளையாடுதம்மா!
பத்துதலை நாகமம்மா தாயாளே! - உனக்கு
படமெடுத்து ஆடுதம்மா தாயாளே!
சிங்கமதில் ஏறியெல்லோ சிங்காரி வாருமம்மா தாயாளே!
மக்கள் குறை தீர்க்கவெல்லோ தாயாளே!
உன்னை மனமிரங்கிப் பாடுகின்றேன் தாயாரே!

**தி. தவராசா (சிவலிங்கம்)**
பொலிகண்டி.

---

அபிராமி அம்பிகே ஆனந்தரூபினி!
அகிலமதை ஆளுகின்ற வல்வைமுத்துமாரி
ஆடிவர வேணுமம்மா ஆனந்த ஜோதி
ஆதரித்து காத்திடுவாய் எங்கள் குலதேவி.

வேம்பினுள் உறைந்தாய் வேதனைகள் நீ தந்தாய்
வேண்டியே நின்றேன் வித்தைகள் வளர்த்தாய்
வேதாந்த ரூபினி நாதாந்த மருள்வாய்
நாடியே வந்தோர்க்கு நற்றுணை புரிவாய்.

ஆத்தாளைச் சரணடைந்தால் அதிகவரம் பெறலாம்
பூத்தவளைப் போற்றிநின்றால் புதுமைதான் நித்தலும்
காத்திடுவாள் என்றும் கள்ளமற்ற அன்பர்களை
சேர்த்திடுவாள் தன் மலர்ப்பாதம் காட்டி
காய்த்திடுவாள் கொடுவினைகளையும் கொட்டங்களையும்
மாய்த்திடுவாள் மாயச் சாத்தான்களையும் - மாண்புமிகுதாயாவள்.

**V. சுமதீஸ்வரன்**

## காப்பகமே காப்பகமே எங்களை காத்திடம்மா

காப்பகமே! சருகைச்சேலை கட்டி அழகாக வீற்றிருப்பாள்
பவளத்தாலே முடியும் வைத்து வீரத்தையும் காட்டிடம்மா!

வேப்பிலை காறியவள் எங்கள் முத்துமாரி
வேடிக்கையும் காட்டிடுவாள் எங்கள் முத்துமாரி
மஞ்சள் முகத்தழகி எங்கள் முத்துமாரி
மங்காத தீபமவள் எங்கள் முத்துமாரி
குங்குமக் காறியவள் எங்கள் முத்துமாரி
கண்காண் தெய்வமம்மா எங்கள் முத்துமாரி
கருணை காட்டிடம்மா எங்கள் முத்துமாரி

வல்வையில் கோவில் கொண்ட முத்துமாரி
எம்மை பஜனைபாட வைத்தருளும் முத்துமாரி
கடல் கடந்து வந்தாய் அம்மா முத்துமாரி
எங்கள் கண்ணீரை துடைத்திடம்மா முத்துமாரி
உன்னை போற்றாத நாள் இல்லை முத்துமாரி
என்னை புகழோடும் பொருளோடும் வைத்திடம்மா
முத்துமாரி வேப்பிலைக் காறியவள் முத்துமாரி
வேடிக்கை காட்டிடுவாள் முத்துமாரி.

## அம்மா முத்துமாரி

அம்மா முத்துமாரி எங்கள் அழகு முத்துமாரி
ஆனந்தமாய் வீற்றிருப்பாள் அன்னை முத்துமாரி (அம்மா)

எங்கும் நிறைந்திருப்பாய் எங்கள் முத்துமாரி
இதயச்சுமையை குறைத்திடுவாள் எங்கள் முத்துமாரி (அம்மா)

மஞ்சள் முகத்தழகி எங்கள் முத்துமாரி
மங்காத தீபமவள் எங்கள் முத்துமாரி (அம்மா)

உலகனைத்தும் காப்பவளே எங்கள் முத்துமாரி
உன்பாதம் சரணடைந்தோம் எங்கள் முத்துமாரி (அம்மா)

**பொ. சத்திவேல்**, வல்வெட்டி.

## அம்பாள் அற்புதம்...!

ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த எனது பெயர் அருமைத்துரை செல்வச்சந்திரன். கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்பு லண்டனுக்கு சென்ற நான் பலவிதமான நோய்த் தாக்கங் களுக்கு ஆளாகி, இதனால் மனநிலையும் தளர்வடைந்த நிலையில் 2017.11.19 ஆந் தேதியன்று இலங்கைக்கு வந்தேன். லண்டனிலும் பின் இலங்கைக்கு வந்த நிலையிலும் சிலமாதங்களாக வைத்தியம் செய்தும் எவ்வித பலனும் சுகமும் ஏற்படவில்லை. நவம் மாமாவின் அறிவுறுத்தலுக்கமைய, இப்புத்தக ஆசிரியரான சிவகுமாரன் ஐயாவைச் சந்தித்தேன். ஐயா அவர்கள் எங்கள் வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்பாளிடம் சரணடைந்து என்னென்ன வழிபாடுகள் செய்ய வேண்டும், எப்படி பிராயச்சித்தங்கள் செய்ய வேண்டுமென்பது பற்றிக் கூறினார். இதன்பின்பே நான் லண்டனுக்கு செல்லமுன்பு செய்த நேர்த்தியாக அம்மனுக்கு கரகம் எடுத்த நிகழ்வு ஞாபகத்திற்கு வந்தது. இதன்பின்பு அம்பாளும் இரண்டு வடிவங்களில் கனவில் வந்தார். நாகபாம்பு ஒன்று, ஆடியாடி என்னருகில் வந்து நிற்பதையும், மூதாட்டி வடிவில் முத்துமாரித்தாயார் என்னருகில் வந்து வேப்பிலையால் வருடுவதையும் கண்டுகொண்டேன். மறுநாள் காலையே புத்துணர்ச்சி பெற்றவனாக அம்பாளிடம் மீண்டும் நேர்த்தி வைத்தேன். ''இந்தவருடம் (2018) மகோற்சவம் வரைக்கும் நான் லண்டனுக்குச் செல்லாது இங்கேயே நின்று விரதமனுட்டித்து மகோற்சவ வழிபாடு செய்தபின்பே லண்டனுக்கு மீண்டும் செல்வதாக" தாயாரிடம் உறுதிபூண்டேன். இதன் பிரகாரம் எனது உடல் வருத்தமும் வயிற்று வருத்தமும் சஞ்சலமும் முற்றிலுமாக குணமடைந்துள்ளது. இவ்வருட தைமாதமளவில் பூரண சுகம் பெற்றுவிட்டேன். சுகம்பெற்ற நான் சித்திரை மாதம் வரைக்கும் தற்காலிகமாக இங்கேயே தொழில் புரிகின்றேன். சித்திரை மகோற்சவம் கொடியேற்றத்திற்கு மூன்று நாட்கள் முன்பாக அதாவது 11.04.2018 அன்று இரவு முன்பு வந்தது போலவே பாம்பு ஆடியாடி என்னருகில் வந்தபின்பே அம்பாள் சுகப்படுத்திய இவ்வற்புதத்தை எழுதவேண்டுமென்ற ஆவல் மேலிட்டது. லண்டனுக்கு சென்று மீண்டும் இங்கு வரும்போது முத்துமாரி அம்பாளுக்கு கரகாட்டம் எடுப்பதாகவும், அம்மன் ஆலயத்திற்கு நிதியுதவி செய்வதாகவும் நேர்த்தி வைத்துள்ளேன்.

**அருமைத்துரை செல்வச்சந்திரன்**
ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை.

# அம்பாள் அருளிய வரம்

எனது பெயர் பாலசுப்பிரமணியம் முரளீதரன். வல்வை மண்ணை பிறப்பிடமாக கொண்ட நான் 33 வருடமாக லண்டனில் வசித்து வருகிறேன். முதன்முறையாக 2017ம் ஆண்டு 32 வருடங்களுக்கு பிறகு மகோற்சவத்திற்கு எங்கள் அம்பாளிடம் வந்தேன். வரும் முன்பு முத்துமாரி அம்மனுக்கு ஒரு சிறப்பான அபிஷேகப் பூஜை செய்தேன். அந்த மகிமையே எனக்கு அங்கு வரும் பாக்கியம் கிடைத்தது. இ∴து அம்பாள் எனக்கருளிய வரம்தான். பலசோதனை களுக்கு மத்தியில் எனக்கு அம்பாளின் அழைப்பு கிடைத்தது. இந்த வருடத்தில் ஒரு தங்கமானது ஒரு அழகான அணிகலமாக வருவதற்கு முன்பு தட்டானிடம் எத்தனை அடிகள் வேண்டுமோ அதைப் பதப்படுத்தி எடுப்பதற்கு. இதேபோல் என்னையும் அம்மன் மாயை என்ற வலையில் இருந்து பதப்படுத்தி எடுத்துள்ளார். என்னுடைய மனநிறைவையும் என்னுடைய பெரிய முன்னேற்றத்தையும் என்னும் சில வருடங்களில் உலகளவில் சூரியஒளியைப் போன்று வெளிச்சத்திற்கு கொண்டு வருவார் என்பதில் எந்த ஒரு பிற்பாடும் இல்லை. என்னுடைய கடைசி மூச்சுவரை அந்த தாயின் அற்புதத்தை எல்லோரும் அறியும் எளிய முறையில் என்மூலமாக உலகிற்கு கொண்டுவரும் காலம் நெடும் தொலைவில் இல்லை என்பது உறுதி.

**என்னுடைய உண்மையான சிறுகுறிப்பு** : தான தர்மம் செய்வதற்கு செல்வத்தை தேடுங்கள். நல்ல உள்ளங்களை தேடுங்கள். எத்துனை துன்பம் வருகினும் எங்களுடன் கடைசிவரை உறுதுணையாக இருப்பவர்கள் அன்பர் என்ற பந்தத்தை தேடுங்கள். மனைவி, மக்கள் கடைசிவரை எங்களுக்கு பக்கபலமாக இருக்கபொறாமை என்ற நிலையை அடியுடன் வெறுத்து ஒதுக்குங்கள். தானாநே!

| | |
|---|---|
| *மீண்டும் சொல்கிறேன்.* | *ஆண்டவனை நம்புங்கள்.* |
| *நல்லகுருவை நம்புங்கள்.* | *நல்ல உள்ளங்களை நேசியுங்கள்.* |
| *உழைப்பை நம்புங்கள்.* | *உங்களை நம்புங்கள்.* |
| *நேர்மையாக இருங்கள்.* | *உழைப்பு தானாக வரும்.* |

13ஆவது பிரதியில் என்னுடைய பதிப்பை பிரசுரித்ததற்காக எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பா. முரளிதரன்** (07958944201)

## பிரபஞ்சத்தில் தூலமும் சூக்குமமும்

பிரபஞ்சத்தில் மானுடத்தின் தத்துவ அங்கங்களாய் விளங்குவது பூதம் ஐந்தும் கரணங்கள் ஐந்தும் பொறிகள் ஐந்தும் புலன்கள ஐந்தும் பொருந்திய குணங்கள் ஓர் நான்கும் (மனம், புத்தி, சித்தம், குணம்) நாதமுமே. நாதம்:- இது வித்தியா தத்துவங்கள் எனும் காலம் நியதி, வித்தை, ஆக்கம், புருடன், மாயை கலை எனும் ஏழும் சிவ தத்துவங்களாய் ஈஸ்வரம், சுத்தவித்தை, சதாக்கியம், விந்து, சிவம் ஆகிய ஐந்தும் பன்னிரு தத்துவங்களாய் சேர 36 தத்துவங்களேயாய் இத் தத்துவங்களை கடந்து சிவ வெளியாம் இது பூதம், கரணம், பொறிகள். ஐம்புலனும் பொருந்திய குணங்கள் ஓர் மூன்றும் நாதமும் கடந்த வெளி மாயா ஆனவர் மாயையினாலே நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகிய ஐம்பூதங்கள் அடங்கிய தாதுவாய் ஸ்தூல உடம்பில் சூக்குமமான ஆன்மாவை அடக்கி இது பிரபஞ்சத்தில் படைத்து போகத்தில் வீழ்த்தி அமிழ்த்தி அனுபவிக்க வைத்து ஜனன வழிகண்ட இருவினை பயனாக தன்னை அடைந்து உய்யும் பொருட்டு பஞ்ச கிருத்தியத்தை நிகழ்ச்சி நிற்பவன் சிவன்.

ஒரு நாட் கூலிக்கு மாலையில் ஊதியம் அவ்வூதியம் மறு நாளுக்கு உதவுவது போல் உத்தியோகமானால் ஒரு மாதமுடிவின் ஊதியம் மறு மாதத்திற்கு உதவுவது போன்றும் இப் பிறவியில் நாம் செய்யும் வினைப் பயன் மறு பிறவிக்கு ஊதியமாகிறது. தினை விதைத்தவன் தினை அறுக்கின்றான் என்பது போல் இப் பிறவியில் விதைக்கும் விதையே மறுபிறவிக்கு வரும் கொடையாம் (விதியாம்) இவற்றை எம்முன்வினைப் பயன் என்கிறோம். புவியில் அரிதாகிய மானிடப்பிறவி அரிய பிறவியேயாம் ஸ்தூல பூதம் ஐந்தும் கொண்டு இயற்றப்பட்டது ஸ்தூலசரீரம் இதற்கு மெய், வாய், கண், செவி, மூக்கு இவை ஞானேந்திரியங்கள் ஆகும். இவற்றிற்குள்ளே இருப்பதுதான் தன்மாத்திரை. இது தான் சூக்கும பூதம் தன் மாத்திரையை அனுபவிக்க கன்மேந்திரியங்களாய் விளங்குவது செய்வது கை, நடப்பது கால், வசனிப்பது வாக்கு, விடுவது குதம், இன்பம் தருவது - குறிகளும் ஆகும். இங்கே காணப்படும் அதிசயம் தலையிலேயே மூளை, கண். மூக்கு, வாய், செவி சேர்ந்திருப்பது

அற்புதமே. ஆனால் உதவி செய்யும் கன்மேந்திரியங்களை உறுப்புக்களாய் கொண்ட வடிவம் ஸ்தூல சரீரம் ஆகும். சூக்கும சரீரத்தில் மனம், புத்தி, சித்தம், குணம் எனும் அந்தக் கரணங்களும் கொண்டு 24 ஞானத்தத்துவங்களை அடக்கி விளங்கி நிற்பர் இவ்விரு சரீரங்களும்.

ஸ்தூலமாகிய ஜடத்தை அருணகிரியார் கந்தரலங்காரத்தில் தோலால் சுவர் வைத்து நாலாறு காலால் சுமத்தி இருகாலால் எழும்பி வளை முதுகோட்டி இருகைநாற்றி நரம்பால் ஆர்க்கையிட்டு தசைகொண்டு வேய்ந்த அகமென்றும், அகம் பிரிந்தால் என்று விழி வேற்றுமையாய் சூக்குமமான உயிரையும் வேலால் கிரி துளைத்தோன் இருதாளன்றி வேறில்லையே என்றும் மேலும் உதித்தாங்குஉழல்வதும் சாவதும் தீர்த்து என்னை உன்னிலொன்றாய் விதித்தாண்டருள் தருங்காலம் உண்டோ. என்றும் திருவருளை நாடி ஏங்கித் தவிக்கின்ற நிலையும் மேலும் இறையருள் பெற்று விட்டால் ''முடியாப் பிறவிக் கடலில் புகார்' என்றும் முழுதும் கெடுக்கும் மிடியால் (வறுமை) படியில் (பூமி) விதனப்படார் என்றும் அவுணர் குலம் அடங்கப் பொடியாக்கிய பெருமான் திருநாமம் புகல்பவரெ என்றும் உறுதிமொழி கூறுகின்றார். இன்னும் நாளென் செய்யும் வினைதான் என்செய்யும் எனை நாடிவந்த கோள் என்செய்யும் என்று பாவக்கிரகங்களுடன் எதிர்த்து வெற்றிமுழக்கம் செய்தும் கொடுங் கூற்று என் செய்யும் என்று எமராஜனுக்கே சவால் விடுகின்றார். பிரமதேவனுக்கே எனக்கு மிண்டும் விதி எழுத வந்தால் எம்பிரான் அவர்க்கு முன்பொருமுறை ஒரு விலங்கிட்டவன் இப்போது இரு விலங்கிடுவான் என்று தண்டனை வார்த்தை வழங்கி நிற்பதை பங்கேருகன் என்ன பட்டோலையிலிடப் பண்டுதளை தங்காலில் இட்டதறிந்திலனோ என்று சவாலிட்டதையும் இயம தர்மராஜனுக்கு மேலும் தந்தைக்கு முன்னம் தனி ஞானவாளொன்று சாதித்து அரள் கந்தசுவாமி என்னைத் தேற்றிய பின்னர்காலன் வெம்பி வந்து என்னை என் செயலாம் என்றும் அவன் திருவருளாகிய சக்தி வாளொன்றினால் இயம தர்மனின் கையொன்றிலிருக்கும் பயங்கரமாய திரிசூலத்தை திருவருளினாலே உருக்கி சிதைப்பேன் என்று போர்முழக்கம் செய்கின்றார். என்னே வெலனின் அருட்கொடை.

அருணகிரியார் நாவிலே முருகப்பெருமான் பிரணவத்தை வேலினால் பொறித்த காரணத்தால் ஞான தேசிகனாய் விளங்கி நிற்கின்றார். முருகனான சரவணனை சிவன் பெற்றதால் ஆண்பிள்ளை என்றே சொல்லவேண்டும். சிவனும் சக்தியும் ஒன்றென்பதால் சிவசக்தி மைந்தராகின்றார். சக்தியாரின் ஞானப்பாலை அருந்தியதால் ஞானத்தின் ஞானமாய் விளங்கி நின்றார். முருகப்பெருமானின் நிலை இவ்வளவு என்றால் சிவன் பெருமை எவ்வளவு என்று எம்மால் கூற முடியுமா? முடியாது!

**தமிழ்வேதம்:** வாசி வாசி வாசி என்று தொடர்ந்து விரைவாய் சொல்லில் உச்சரிப்பதால் வாசி - சிவா ஆகி சிவரூபமாய் விளங்கும்! மேலும் தொடர்ந்து சிவ சிவ சிவ என்று சொல்லி வர சிவ - வசி ஆகி நிற்கும் எம் மனத்துள்ளே சிவம் வசிந்தும், சிவத்துள்ளே மனம் வசிந்தும் மனமும் சிவமும் சிவமாகி நின்று; வாசக தீட்சை பெறுகின்றது ஆன்மா (நீங்களும் உச்சரித்துப் பாருங்கள்) இது தமிழ் வேதம்.

அநாதியானவன் சிவன், நித்திய ஆன்மாவின் பொருட்டு பஞ்ச கிருத்தியங்களை புரிகின்றான். காரணம் சிவனானது அநாதியானது ஆன்மா நித்தியமானதால் சிருஷ்டி (படைத்தல்) திதி, சங்காரம் கூடாத ஜீவான்மா எனப்பட்டது சிவத்துடன் ஐக்கியப்பட்டு ஜிவன் என்கின்ற நிலை மறந்து சிவமாய் நிற்கும் இந்நிலை முத்தி நிலையின் முதற்படியாகும். இந்நிலை முற்றின் தமிழ் சொல்லில் 'சீவனீ (சீ - சி) சீவன் ஆனாது 'சீகரத்தின் திரையில் சுழி மறைந்தால் சுழியாகிய விதியை சீவன் மறந்து சிவமாகியே நிற்கிறது. (சீவன் - சிவன்) மாயையயின் விதியாகிய சுழியை பொருத்திய உடலை மறந்து சீவன் சிவன் ஆகி நிற்கின்றது. சிவமானது திரையாகிய விசிறி (ஊசல் மறைத்து நிற்கும் போது சவமாகி நிற்கும் (சிவம் - சவம்) (சீவன் - சிவன் - சிவம் - சவம்) பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார் சீவன் சிவமாகி நிற்கும் வேளை பல்லாண்டு காலம் வாழும் சாத்தியத்தை இந்த மானுடம் பெறும் வசதி கொண்டது. அது தான் தவயோக சித்தநிலை.

தமிழ் எழுத்துக்கள் மட்டுமல்ல எந்தமொழியிலும் சுழி திரை, நெடுங்கோடு குறுக்குக்கோடு புள்ளி ஆகிய ஐந்து உறுப்புக்களும் அமைகின்றன. அரபு மொழியில் உடுக்கு குறியும் ஒரு உறுப்பாம்.

தமிழ்மொழியானது அட்சரங்களின் ஐந்து உறுப்புக்களையே கொண்டது. இணையில்லா தமிழ்மொழியின் முதல் எழுத்தாகிய 'அ' சுழிதிரை நெடுங்கோடு குறுக்குக்கோடு ஆகிய நான்கையும் (OU I) கொண்டது. அ, புள்ளியானது முற்றும் புள்ளியாம். ''அகரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு'' (வள்ளுவன்) ''அகர உயிர் போல அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து'' என்றார் உமாபதி சிவம் (திருவருட்பயன்), அகரமுமாகி அதிபனுமாகி அதிகமுமாகி அகமாகி என்றார் அருணகிரிநாதர் (திருப்புகழ்), அகரமானது அம்மா, அப்பா, அத்தன், அரன், அம்மை அருள் போன்று எத்தனையோ முன்நிற்கும் தமிழ் சொற்களாய் விளங்குவதும் அயன் எனவாகி, அரி எனவாகி, அரன் எனவாகி அவர் மேலாய இகரமும் (இறை) ஆகி நிற்கும் சிவம். விசேடமாக திருவிசைப்பாவிலே அண்டமோர் அணுவாம் பெருமை கொண்ட அணுவோரண்டமாம் என்றும் சொற்பதங்களினால் விளங்கி நிற்பதும், ''இறையாய் மாயாவே'' ஒடுக்கத்துள் ஒடுக்கமாயும் பாரிய பொருளில் பெரிதாயும் விளங்கி இயக்கியும் இயங்கியும் நிற்பவன் சிவம் என்கின்றார் சேந்தனார்.

தீட்ஷாபேதம்: வேதாகமம் கூறுவது என்ன. இத்தனை மேலாய சிவத்தை ஆன்மா அடைய (ஈடேற) என்ன வழி? சமய தீட்சை முதலில் பெற்றும் அறுவகை தீஷை பெற்றுய்ய வேண்டுமென்கிறது வேதம். (சப்த, ஸ்பரிச, நயன, ரூப, ரச, ஸ்கந்தம்) சமய தீட்டை பெற்று 1வது சரியைத் தொண்டை சிவனடியார்க்கும் ஆலயத்திற்கும் தொண்டு செய்தும் 2வது கிரியை. இது விசேட தீட்சை பெற்று கிரியை வழிபாட்டு முறையாகிய சிவனடியார்க்கும், சிவாலயத்திற்கும் தொண்டு செய்வதுடன் சிவலிங்க பூசையும் மேற்கொண்டும், மேலும் நிர்வாண தீட்சை பெற்று சரியை, கிரியை, யோகத் தொண்டையும், சிவத்திற்கும், சிவனடியார்க்கும் தொண்டாற்றியும் சிவலிங்க பூஜை செய்தும், ஞானபூஜை செய்தும், அதன் மேல் ஆச்சாரியார், அபிசேகம் பெற்று சிவனடியார்க்கும், சிவாலயத்திற்கும் சிவத்திற்கும் தொண்டு செய்து (வர்ணாச்சிரமத்திற்கேற்ப சந்தியா வந்தனம் செய்வதே சிறப்பாயமையையும்) ஆச்சாரியார் அபிசேகம் பெற்று சிவோக நிலை நின்று சரியைத் தொண்டுமாற்றி சிவலிங்க பூசை செய்தும் ஞான பூசை செய்தும் மேலான தீர்க்கை, பிரதிட்டை முதலியன செய்தும் வரக்கூறுகிறது.

(ஹோமத்துடன் கூடிசெய்வது ஔத்திரிய தீசையாம். இது நயன, ஸ்பரிச வாசகக, மானச, யோக சாஸ்திர மெனும் 6 வகை பெறும். இவ்வாறு (6) தீட்சையும் சக்தி தீர்க்கையாகிய ஞானவதி பிரகாரம் ஆறு வகையும் கிரியாவதி பிரகாரம் மாந்திரிய தீர்க்கையாகிய ஆறுவகை தீட்சையாவும் மொத்தம் பன்னிரு வகைப்படும். இப்பன்னிரு தீர்க்கையும் சமய விசேட நிர்வாண தீர்க்கைக்கு உள்ளாகும் போது 3x12 = 36 முப்பத்தாறு வகைப்படும். சமய, விசேட, நிர்வாண, ஆச்சாரியார் அபிடேகமாக நான்கும் சேர 40 வகை தீட்சை பெற்றார் தேசிகராவார்.

சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரே வேர்திரைப்பு வந்தபோது வேதம் வந்து உதவுமோ மாத்திரைப்போது உள்ளே மறித்து ஓங்க வல்லீரேல் சாத்திரப்பை நோய்களேது சத்தி, முத்தி, சித்தியே என்கின்றார் சித்தர்கள். இம்மானிடப்பிறப்பை நோக்கின், இறைவனைச்சேர்வது தூரம் தூரம் தூரமென்று சொல்லுவார்கள். சோம்பர்கள் மண்ணும் விண்ணுமாய் பரந்த அப்பராபரம் ஊரும் நாடும் காடும், மேடும் உழன்று தேடு ஊமைகாள் நேரமது ஆகுமுன்னே அறிந்து வந்து நில்லுமே என்கின்றார் சித்தர். நாலு வேதமோதுவீர் ஞான பாத மறிகிலிர் பாலினுள் நெய் சேர்த்தவாறு பாவிகள் அறிகிலீர் ஆலமுண்ட கண்டனார். அகத்துள்ளே இருக்கவே காலன் என்று சொல்லுவீர் கனாவிலுமறிகிலீர். வித்தில்லாத சம்பிரதாயம் மேலுமில்லை கீழுமில்லை தச்சில்லாத மாளிகை படைத்தவாறு அது எங்கனே? பெற்றதாயை விற்று அடிமை கொள்ளுகின்ற பேதைகாள் சித்தில்லாத போது சீவன் இல்லை இல்லையே என மொழிந்தார் சித்தர்.

**சரியையின் சாரம்:**

சிவாலயத்திற்கும் சிவனடியார்க்கும் தொண்டு செய்து மோட்சமடைதல் சாலோகமுத்தி என்று சொல்லப்படும்.

**கிரியையின் வழிநின்று:**

சரியைத் தொண்டுடன் சிவத்தை அகமும் புறமும் பூசித்தல். இதனால் கிடைக்கும் மோட்ஷம் ''சாரூப முத்தி'' யாகும்.

**யோகவழி நின்று:**

சரியை, கிரியையுடன் கூடி பின் தாமும் சிவமும் ஒன்றென

உணர்ந்து, தியானத்தில் இருத்தல். இதனால் கிட்டும் மோட்சம் ''சாமீப முத்தி''

**ஞான வழி நிற்றல்:**

பசு, பதி, பாசம் முப்பொருளையும் அறிந்து நிட்டை கூடி சிவங்கூடி சிவ யோகத்திலிருந்து சிவத்தடன் ஐக்கியப்படல் ''சாயுச்சிய முத்தியே''.

''உவமை இல்லா கலைஞானம் உணர்வரிய மெய்ஞானம், தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார்'' மணிவாசகப் பெருமானும் குருந்த மரநிழலிலே சிவத்தால் தடுத்தாட்கொள்ளப்பட்டு சாம்பவ தீர்க்கையாகிய திருவடி தீட்ஷை பெற்றநிலை போன்றதே.

திருவடி தீட்ஷை என்பது காதலால் வருவது. அன்பு வழியில் வாழ்ந்து அண்ணலை அன்பு கொண்டு மனத்திருத்தி அவன் அடித்தொண்டு பரவும் அன்பினால் வருவது காதல். அன்பு கொண்டார் வர நேரம் தவறின் வழி மேல்விழி வைத்து காத்திருப்பதுவும் அன்பின்முன் அடையாளம்.'' பேசிக் கல்யாணம் செய்வதில் முதலில் வருவது அன்பு. ஆனால் காதலித்து வீடுவிட்டு பெண் ஓடுவதும் மாப்பிள்ளை பெண்ணை நாடி வந்து சிறை எடுத்து சென்று திருமணம் (கடிமணம்) புரிவதும் காதல். முருகப் பெருமானும் சிறைமீட்டு சென்றே வள்ளியை திருமணம் புரிந்ததாக கந்தபுராணம் கூறுகிறது. ''வள்ளி'' என்பது மெய் அடியார்களேயாம். காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி என்னும் (திருப்பதிகத்தை) ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பதுவும் சோதி, சோதிப் பிளம்பினுள் திருஞான சம்பந்தப் பெருமானின் திருமண விழாவிற்கு வந்த சிவனடியார் கூட்டத்தினுடன் திருஞான சம்பந்தப் பெருமானும் மணமகளும் திருநாவுக்கரசரும் சிவத்துடன் சோதியுட் கலந்த வேளை பாடிய பாடல் ''காதலாகி கசிந்து கண்ணீர்'' காதல் என்பது அன்பினும் பலபடி மேலாயதாகும். உண்மைக் காதலாலே தான் சிவம். வந்திறங்கி இரங்கி அருள் புரிவதையும் ஈற்றில் மோட்ஷ நிலையை அருளி ஐக்கியப்பட்டுச் சீவத்துடன் கலப்பதையும் காட்டி நிற்கும். சிற்றின்ப நிலையில் ஐக்கியம் என்றால் திருமணம் ஆகும். இவற்றைத்தான் வள்ளி திருமணம் விளக்கி நிற்கின்றது. முத்திக் கொரு வித்தாய் முருகன் திகழ்கின்றான் என்பது அருணகிரியாரின் திருப்புகழ்.

## மெய் அடியார்

மெய் அடியார் யார்? மனம், வாக்கு, காயங்களினால் நெக்குருகி கண்களின்று ஆனந்த பஸ்பம் ஆறாய் பெருக, தன்னை மறந்து தன்நிலை கெடும் வரை பிரமனின் மண்டையோட்டில் பிச்சை புகும் கொன்றை மாலையை தலைக்கணித்த சிவனை தலையாலே வணங்குபவருமாம், அசுரரும் தேவரும் பாற்கடலை திருவமுதிற்காக கடைந்த போது மத்தின் நாணாய் நின்ற வாசுகி வேதனை தாங்காது கக்கிய ஆலகால விடத்தை அசுரரும் தேவரும் உய்யும் பொருட்டு தாமே உட்கொண்டு கண்டத்தை நீலநிறமாக்கிய சிவனை கண்களேகண்டு நெக்குருகித் தொழுவரும் செம்மேனியனின் திருவிளையாடல்களை செவி உற்றும் சுடலையிலே நடமிடும் பிரானை வாயார வாழ்த்தியும் மேகங்கள் உறையும் கயிலைமலை நாதனை நெஞ்சார நினைத்து உருகியும், நஞ்சுப்பையை வாயினுள் கொண்டிருக்கும் பாம்பை அரையில் செறித்தவனாய் பரம்பொருளை கைகளைக் கூப்பித் தொழுபவரும், அரன் உறையும் அழகிய கோபுர வாயிலுக்கு செல்லாதிருக்கும் கால்களால் பயன் என்ன என்னும் நினைவுடன் அவனே நமக்கு துணை, பிறிதொரு துணை நமக்கில்லையே என்னும் முடிவுடனும் உறுதியுடன், இறுமாந்திருந்து, திருமாலொடு நான்முகனும் காணாத் திருவடியை தேடி கண்டு கொண்டவனே மெய்யடியான் ''மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் ஆகுலநீர பிற.

## மாயா மாங்கனி ஞானம்

நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே மஞ்சனத் தீர்த்தம் கொள்ளவராய்'' பராபரமே என்றார். தாயுமானவர் (மா+யா → மாயா) 'மா' என்றால் பரந்து விரிந்தும் 'யா' என்றால் ஒடுங்கியும் ஒடுங்கிய ஒடுக்கத்துள் ஒடுங்கியும் விரிவினுள் விரிவாயும் உள்ளார் சிவன். மாயையால் பிரபஞ்சத்தை படைப்பதே படைப்புத் தொழில் (இதன் விளக்கத்தை மற்றும் விளா விளக்கத்தில் பார்ப்போமாக" 'மா' என்றால் மாமரம் என்றும் கருத்துப்படும். மாவின் விளக்கம் மாங்கனியிலேயே அடங்கிவிட்டது.

## திருக்கயிலை ஆனந்த கோலங் கொண்ட நிலை:

கனகசபையிலே பார்பதி சகிதம் சிவனிருக்க திருவாசலிலே தமயனின் மூக்கை (துதிக்கையை) தம்ப இஞ்சியும், முளமும் சாறும்

போட்டு அளக்க தம்பியின் கண்களை தமயன் எண்ணி ஒன்று இரண்டு என்று பன்னிரு விழியெனத் தொகுக்க குழந்தைகள் விளையாட்டு நடக்கும் வேளை இவ்விளையாட்டு பிணக்கை பார்பதி தீர்க்க. சிவன் கண்டு இரசிக்கும் வேளையுமாய் சிவனின் ஆஞ்ஞையாலே நாரத மாமுனி மாங்கனியைக் கொண்டு சமூகம் தருகின்றான். வந்த முனியும் இது ஞானக்கனி என்றும் பிரித்தால் ஞானம் கெட்டுவிடும் ஒருவரே உரித்தானவர் என்று மொழிந்து சிவன் கையில்லளித்து விடுகின்றான். குழந்தைகளோ கணக்கியலில் அளவைப் போட்டியில் ஒருவரை ஒருவர் சினந்து தாயிடம் முறையிட்டு குழந்தைப் பருவப் பிடிவாதம் இடும் நிலைவிட்டு இப்போ அந்த ஞானக் கனிக்கு போட்டியிட்டு எனக்கு எனக்கு என்று வாதித்து வர. சிவன் உலகை யார் முதலில் வலம் வருகின்றாரோ அவருக்கே ஞானக்கனி என்று திருவாய் மலர, மனோ வேகத்தையும் மிஞ்சிய வேகத்தை கொண்ட தாவடி ஒட்டு மயிலில் அரோகணித்து இதோ ஒரு நொடியில் சர்வ உலகை சுற்றி வருகின்றேன் என்று புறப்பட்டான் ஆறுமுகன். செல்லுமிட மெல்லாம் ஒவ்வோர் லோகத்திலும் தாய், தந்தையரை காண்கின்றான். சர்வேஸ்வரன் சர்வ லோகங்களிலும் முருகனுக்கு காட்சி தருகின்றான்.

விநாயகன் தனக்குப் பாரிய வயிறு எழுந்து வேகமாய் முருகனைப் போல ஓடவும் முடியாது, வாகனமோ பெருச்சாளி, ஊரும் என்னுருவம் போன்றே எனக்கு கிடைத்த வாகனமும் என மனம் நொந்தான். சிந்திக்கத் தொடங்கினான். ஞானக் கொழுந்தல்லவா! கனியை பிரித்தால் ஞானம் கெட்டுவிடும் என்று மாமுனி உரைத்த வார்த்தையை உற்றுநோக்கி கனியுள் இருக்கும் ஞானத்தை துருவினான் விநாயகன். மனத்துள்ளே இரு கூறாக்கினான் வெளித் தோலினூடு அறிவால் நோக்கினான். தோல், கனியம், விதை மீண்டும் வித்தினுள்ளே சென்றான். பட்டை, வித்திலையுறை, வித்திலை, முளையுரு அங்கே தான் அறிவை நோக்கினான். கூறுபடுத்தினான். இருசமமாகப் பிரித்தால் முளையுருவில் இருக்கும் உயிர் இறந்து போம் என்பதை உணர்கின்றான். அந்த வித்துருவுள்ளே விநாயகன் சிவத்தை பார்வதி சமேதராய் கண்டார்.

முருகப் பெருமானோ ''மா'' பரந்து விரிந்த பிரபஞ்சத்தின் படைப்புகளில் காண விநாயகப் பெம்மானே ''யா'' வாகிய ஒடுக்கத்தில் மலமற்ற நின்மலனைக் காண்கிறான்.

''மா'' என்பது விரிவுபடும், கனியுட் சிவன் சீவனாய் ஒடுங்கி நிற்பதை உணர்ந்தார். விநாயகப் பெருமான் விதை முளைத்து கிளை விட்டு கன்றாகி மரமாகி பூர்த்துக் கனிந்து தன்னைப் போன்று வேறு பல விதைகளைத் தரும் அவைகளும் அப்படியே மேலும் மேலும் விளைவை உண்டுபண்ணும் என்றும் நான் முதலில் உலகைவலம் வந்தேன் எனக்கூறி ஞானக்கனியை வாங்கும் பொழுது ஈசானத்தில் முருகப் பெருமான் பிரபஞ்ச லோகங்களை சுற்றி வலம் வந்து விட்டார்.

வித்தெல்லாம் ஒன்றென்று காட்டி, அதில் விளைவு பல பல வேறென்று காட்டி, சித்தெல்லாம் செய்தது பாரீர், திருச்சிற்றம்பலத்தே திருநட ஜோதி என்றார் இர்ாமலிங்க வள்ளலார். அகக் கண்ணுள் ஞானக் கொழுந்து ஞானத்தைக் காண, ஞான பண்டிதனான முருகன் தானறிஞ்ச ஞானத்தை வெளிப்படுத்த சித்தங் கொண்டு திருகோலங்களைக் களைந்து ஆண்டியாய் நின்றோர். படைவீட்டில் சென்று யோகநிலை நின்று யோகியர்க்கும், சித்தர்க்கும் ரிஷிகட்கும், ஔவைக்கும், கீரனுக்கும் அருள் பாலித்து பிரபஞ்ச பிறவியை ஒருக்கி பல்லாண்டு காலம் இயமராசனின் கைப்புகுதாமல் வாழ் வழிகாட்டி தானும் அவ்வழி இயங்கியதை இந்த ஞானக்கனி உணர்த்தி நின்றதை உலகோர் அறிய தானே சிவமாய் நின்றதையும் புராண வழிகளில் காணலாம். ''நவவெளி நால் வகையான் நடுவெளிக்குள்ளே நடத்திய நீதி சிவவெளியாம் இது பாரீர் திருச்சிற்றம்பலத்தே திருநட ''ஜோதி'' ஆனந்தக் களிப்பில் வள்ளலார்.

மாவிலே விரிவு காட்டி 'யா' விலே ஒடுக்கம் காட்டி மாவிலே உயிரை கலந்து 'யா' என்கின்ற அட்சரத்தால் ஒடுங்க வைத்து மல பரிபாக மடைந்து சக்தி நிபாத நிலைபெற்று சிவத்துள் ஒடுக்கும் நிலையே ''சுத்தஜோதி, ஜோதியுள் ஜோதியுட் ஜோதி'' என்ற மாயாவால் படைக்கப்பட்ட மாயை! கொண்ட வாழ்வில் மாயை நீங்கும் காலத்தே சுத்த ஜோதியாய் விளங்கும் உயிர். சூரபத்மனின் தாய் மாயை (கந்தபுராண) மாயையான பொருள் எல்லாவற்றையும் சூரனுக்கு அதே மனத்தோடும் அசுர புத்தியோடும் வாழும் வரை எளிதில் வழங்கினாள். அமரராகி பின் நிலையாய வாழ்வை அதாவது தராசின் முள் போன்று நடுநிலை காட்டும். தவப்புண்ணியத்தின் நிலை நடுநிலை. நடுநிலை அடைந்ததால் அதன் பின்பேயே அற்புத நிலையெட்டும் மாயையைக் கடக்கும். மாயையாய் விளங்கி நிற்கும்

பிரபஞ்சத்தைக் கடந்து மனதில் ஞானவெளி எட்டும். இது உறுதி என்பது போல, மாயையினின்று விடுபட்டு சூரபத்மன் தாமே பணி செய்யக் கருதினான் போல், காதல் கொண்டு மயிலாய் முருகனைச் சுமந்தும், முருக நாமத்தை முடியின் மேலிருந்து, கொடியில் நின்று 'ஓம் முருகா நம' என்றும் 'சொக்கநாதம்' என்றும் அழைப்பது போல் பறைசாற்றி நின்றும் முருகப்பெருமானின் பக்தி கிருத்தியத்தில் ஐக்கியப் பட்டு பேரின்பத்தை நித்தியம் பெறுவதை கந்தபுராணம் சாற்றுகிறது.

ஒளியில் விளைந்த உயர் ஞான பூதரத்து உச்சியின் மேல், அளியில் விளைந்ததோர் ஆனந்த தேனை, அனாதியிலே வெளியில் விளைந்த வெறும் பாழைப் பெற்ற வெறுந்தனியை, தெளிய விளம்பியவா முகமாறுடை தேசிகனே என கந்தர் அலங்காரத்தில் அருணகிரிநாதர் வெளிப்படுத்துகின்றார்.

### தமிழ் ஞானம்

அனா அறிவாய் அகலான் அடியவர்க்கு வான் நாடர் காணாதமன் ஒன்றுடன் 0 சேர்ந்தால் 10 ஆவது போல் $1+0 \rightarrow 10$ ஆவது போல் $1+00 \rightarrow 100$ இப்படிப் பல கோடிக் கணக்கான இலக்கங்களைத் தருகிறது. அந்த ஒன்று '1' அந்த '1' ஒன்று அழிந்து விட்டால் பல கோடிக்கும் பெறுமதி இல்லைத்தான். ஒன்றானவன் உருவில் இரண்டாயும் உயிரான செந்தமிழில் மூன்றாயும் நின்றான். ஏன்? ஒன்றானது அகரத்தில் அழியாத ஞானவெளியாய் திகழ்வது எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும். ஆகி ஞானத்தின் கண்களாயும் ஞானத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றன. ஒவ்வொரு '0' பூச்சியமும் சுழியாய் ஜனனமாவது பிறப்பின் பெருக்கமேயாகும். ''ஏழு கடல் மணலை அளவிடின் அதிகம் எனது இடர்பிறவி அவதாரம் என்றார். அருணகிரி. அகரத்தின் தமிழ் மொழியின் முதல் எழுத்தும் அதையே விளக்குகின்றது சுழியாகிய விதி வலைப்பட்டு திரையாகிய ஊசல் வாழ்வில் போகத்தில் அமிழ்ந்து ஒருவனை (சிவத்தை) உணர்ந்து உல்லாச நிராகுல யோக இத சல்லாபவினோதனை, அறிவின் ஞான வினைவாய்ப்பட்டு ''சும்மா இரு சொல் அற'' என்பதை உணர்ந்து, சல்லாபத்தை ஞானவழி இருத்தி எல்லாம் அறமாயை வாழ்வை எனை இழந்த நலமாய் நின்று போக அறிவின்றி இருந்து.

ஐம்பூதங்களும், ஐம்பொறிகளும் அபக்தி, பேதமின்றி சிவ பேதமாய் ஒடுங்கி, அறிவாகிய ஞானம் சிவமாய் நின்று போத நிலையை மறந்து நிற்கும் நிலையே சிவமாகிய ஒன்று '1' உடன் '0' சேரும் மாய விதி மறந்து ஒன்றாய் நிற்கும் நிலையே உலகியல் ஞானம் இதை அகரம் உணர்த்த 'அ' கரமுதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு' என்று திருக்குறளும் விளக்கி நிற்பது ஆன்மீக விளக்கமாகும்.

10 ஆனது 1 ஐ இழந்தால் 0 ஆகும் எண்ணாகிய '0' விதியாகி விதியால் விளைவதே பிறவித் துன்பமாய ஊசல். அது தான் 'அ' கரத்தில் சுழிக்கு அடுத்த நிற்கும் திரை. இதை உணர்ந்து, பேரின்பமாய் சல்லாபத்தை அடைந்து இருத்தலே யோக நிலை. இறைவனை சதா சிந்தனை கொள்ளுமுயிர் 'அ' கரத்திலேயே நேர்கோடு வழியே குறுக்குக் கோட்டினை அடைந்து அகரத்தை பூர்த்தி செய்து முத்தியாய் முற்றுப் புள்ளியை எட்டிவிடும். இது உறுதி என்பதை கற்றுத் தருவதே அகரம்.

அகரத்துள்ளே அநுபூதியை கற்றுத் தந்தவர்கள் திருவள்ளுவர், உமாபதிசிவாச்சாரியார், திருமூலர், அருணகிரிநாதர், சேந்தனார் போன்ற சிவஞானிகளே, வெளிப்படையாக வெளிப்படுத்துதலை அவர்களின் திருக்குறள், திருவருட்பயன், திருமந்திரம், திருப்புகழ், கந்தரனுபூதி, திருவிசைப்பா போன்ற தொகுப்புக்கள் மற்றும் இது போன்ற வேறு சில திருமுறைகளிலேயும் பிரதிபலித்து நிற்கின்றன.

### புணர்ந்தால் புதிது தோறும் புதிது

இன்னும் நாதா குமரா நம என்றரனார் ஓதாயென வோதிய தெப்பொருள் தான்? என்னும் வினாவிற்கு, ஓதுவித்த நாதர் கற்க, ஓதுவித்த முனி நாண, ஓர் எழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமாளே! (வேத வெற்பில்) என்று திருப்புகழில் கூறியது என்ன? அ, உ, ம, வு, வ, ய - அகர, உகர, மகர, வுகர, வகர, யகர என்னும் அட்சரங்களை நாமே அகரத்துள் காணலாம். இது உண்மை. அதாவது அ + உ + ம் → ஓம் அகரம் உகரம் மகரம் மூன்றெழுத்தும் சேர நாதம் விந்து கலை என்கின்ற ஆறெழுத்தையும் அகரத்தில் விளக்கி குரு நாதனாகி விளங்கி நின்றான். குமரன் (சுவாமி மலையில்)

அ ഠ ണ ന அ அ அ
ா ௱ ள வ வு உ

மேலும், ம, ய, ப தலை கீழாய் அகரத்தில் இருப்பதை காணலாம். ம. மலத்தையும் ய ஆன்மாவையும் குறித்து நிற்கும். மகரத்துள்ளே யகரம் மறைந்து தலை கீழாகி இருப்பது. ஆன்மாவானது மலத்தினால் பீடிக்கப்பட்டன. தலைகீழான உலக வாழ்வை வாழ்ந்து வருவதையும், மலம் நீக்கி மல பரிபாக மடைந்தால் சுத்த ஆன்மாவாய் திகழும் என்பதைக் குறித்தும் நிற்கின்றது.

''எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்''

அகரம் இது குறிக்கின் ∴ ஆயுதம் என் குறிக்கும்? உயிரெழுத்து இது கூறின் ஆயுத எழுத்து என் சொல்லும்...?

சமய பற்றாளன், முருகன் அடியான்
**சு. ஜெயகோபாலசாமி**

**இப்பணி சிறப்புற, அம்பாள் அருளால் தாமாகவே முன்வந்து நிதியுதவியளித்தோர்.**

| | |
|---|---|
| செல்விகள், கோ.காயத்திரி, சைந்தவி - லண்டன் | 50,000.00 |
| ஆர். இராமராஜன் - லண்டன் | 40,000.00 |
| செல்வி மயூரி ஏகாந்தன் - வல்வெட்டித்துறை | 3,000.00 |
| நந்தவனம் கொம்பிளக்ஸ் - வல்வெட்டித்துறை | 3,000.00 |
| பத்மநாதன் அமிர்தராணி - வல்வெட்டித்துறை | 2,000.00 |
| சிவாஜினி சிவதாசன் - கனடா | 1,000.00 |
| S. தர்சன் - வல்வெட்டித்துறை | 1,000.00 |
| சிறிகரன் - துவாளி வீதி, உடுப்பிட்டி | 1,000.00 |
| | 101,000.00 |

தூய்மையாக இருப்பதும்
மற்றவர்களுக்கு
நன்மை செய்வதும்தான்
எல்லா வழிபாடுகளின்
சாரமாகும்.
தீமை செய்பவன்
தனக்கும் மற்றவர்களுக்கும்
தீமை செய்கிறான்.
நன்மை செய்பவன்
தனக்கும் பிறர்க்கும்
நன்மை செய்கிறான்.
உடலும் உள்ளமும்
தூய்மையின்றி
கோயிலிற்கு போவதும்
பயனற்றவையாகும்.
நேர்மையுடனும்
தைரியமாகவும்
பக்தி சிரத்தையுடனும்
வாழ்ந்தால்
இறைவனை அடைவது
உறுதி.

- சுவாமி விவேகானந்தர்.



**அம்பாள் வெதுப்பகம்**
**வல்வெட்டித்துறை.**

தமிழ்ப்பூங்கா. 021 226 4014